**செ. கு. எண்**:299 **நாள்**:23.08.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை - 23.8.2012

விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டம், வீரசோழபுரம் கிராமம் அருகே 21.8.2012 அன்று பாண்டிச்சேரியிலிருந்து சேலம் சென்று கொண்டிருந்த அரசு பேருந்து, நின்று கொண்டிருந்த லாரி மீது மோதியதில், பேருந்தில் பயணம் செய்த கடலூர் மாவட்டம், சாலை நகரைச் சேர்ந்த திரு. சுரேஷ்பாபு என்பவரின் மகன் சிலம்பரசன் மற்றும் நீலகிரி மாவட்டம், குன்னூரைச் சேர்ந்த லாரி கிளீனர் திரு. சீனிவாசன் ஆகியோர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த சாலை விபத்தில் அகால மரணமடைந்த திரு. சிலம்பரசன், மற்றும் திரு. சீனிவாசன் ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயர சம்பவத்தில் உயிரிழந்த திரு. சிலம்பரசன் மற்றும் திரு. சீனிவாசன் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**